1970 செப்டம்பர் 2]

புலவர் பொ. பொன்னம்பலம் : பெருமதிப்பிற்குரிய பேரவைத் தலைவரவர்களே, புதுக்கோட்டை பகுதியில் இருக்கும் வெள்ளாற்றிலிருந்து கும்மங்குடி–பேரையூர் ஆகிய இடத்திலிருந்து வெட்டப்பட்ட கால்வாய் ஒன்று சீர்கேடாக இருந்து வருகிறது. கால்வாயைச் சீர்படுத்தி பேரையூரை அடுத்து மூடு வாயில் ஒன்றை அமைத்து, இதைப் பயன் உள்ளதாக்கும் வகையில் ஆவன செய்ய அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : வெள்ளாற்றில் இருக்கும் தண்ணீர் போதுமானதாக இல்லாத காரணத்தால் மாண்புமிகு உறுப்பினர் சொல்லும் திட்டத்தை ஏற்றுக்கொள்வதற்கு இல்லை.

திரு. கே. விநயகம் : Sir, on a point of order கண்மாய் என்பது தமிழ் வார்த்தையா, ஆங்கில வார்த்தையா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ் வார்த்தை தான்.

திரு. கே. விநயகம் : தமிழ் வார்த்தை தான் என்றால் ஏன் ஆங்கிலத்தில் அப்படியே போடவேண்டும். you should not murder English like this. கண்மாய் is Tamil word. Lake is an English word.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஆங்கில சொற்களை அப்படியே தமிழில் எழுதுவது உண்டு. அதுபோல் தமிழ் சொற்களை ஆங்கிலத்தில் எழுதுவது தவறு இல்லை.

எப்போதும்வென்றான் அருகில் கண்மாய் அமைப்பு

* 202 வினா—திரு. மு. முத்தையா : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒட்டப்பிடாரம் ஒன்றியத்தைச் சேர்ந்த எப்போதும் வென்றான் அருகில் புதிதாக ஒரு கண்மாய் அமைக்க நடவடிக்கை எதுவும் எடுக்கப்பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்போது வேலை ஆரம்பிக்கப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம்.

(இ) அரசு அனுமதி பெற்று வேலை ஆரம்பிக்கப்படும்.

திரு. மு. முத்தையா : பேரவைத் தலைவரவர்களே, கோவில் பட்டி தாலூக்காவில் 1969-ல் அங்கீகரிக்கப்பட்ட கண்மாய்களை கட்டும் செயற்குறிப்பு அரசாங்கத்தினிடத்தில் இருக்கிறதா ? வேலை ஆரம்பிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : கோவில்பட்டி தாலூக்கா பற்றிய விவரங்கள் கனம் உறுப்பினர் அறிய விரும்பினால் தனியாக கேள்வி போட்டால் சேகரித்துத் தருகிறேன். எப்போதும் வென்றான் கிராமத்திற்கு அருகே மலட்டாறின் குறுக்கே 128 கன அடி கொள்ளளவு கொண்ட ஒரு கண்மாய் அமைக்க செயற்குறிப்பு

இருக்கிறது. இதனுல் 1,108 ஏக்கர் பயன்பெறும், சுமார் 840 டன் அதிகமாக உணவு உற்பத்தி எதிர்ப்பார்க்கப்படுகிறது. இதற்கு மதிப்பிடப்பட்டுள்ள ரூ. 19.80 லட்சமாகும். அது அதிகாரியால் பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

Air-ports

* 203 *Q.*—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether the Government are aware of the location of an airport at Salem Town; and

(*b*) if so, whether the views of the State Government have been sought for by the Union Government?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) & (இ) : இல்லே. சேலத்தில் ஒரு விமான நிலேயம் அமைப்பதின் அவசியத்தை ஏற்கனவே இம்மாநில அரசு மைய அரசிற்கு வலியுறுத்தியுள்ளது. நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இதை எடுத்துக்கொள்ள வியலாது என்று மைய அரசு தெரிவித்துள்ளது. இது குறித்து சேலம் உருக்கு ஆலே வருவதனுல் மைய அரசுடன் மீண்டும் தொடர்பு கொள்ளப்பட்டுள்ளது.

திரு. எ. சி. நரசிம்மன் : தலேவரவர்களே, வேலூரிலுள்ள விமான நிலேயத்தில் விமானம் தங்குவது இல்லே. கோயம்புத்தூருக்கும், பெங்களூருக்கும் செல்லும் விமானங்களே வேலூரில் தங்க ஏற்பாடு செய்ய மத்திய அரசுடன் தொடர்பு கொள்ளப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : வேலூர் கோட்டையை பற்றித்தான் எனக்குத் தெரியும். இப்போது மாண்புமிகு உறுப்பினர் சொல்வது உண்மையாக இருக்குமானுல், அது பற்றி மத்திய அரசுக்கு எழுதலாம்.

* 204 வினு—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குமரி மாவட்டத்தில் புதிய விமான நிலேயம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) இல்லே.

(இ) இக்கேள்விக்கு இடமில்லே.

THIRU R. PONNAPPA NADAR : Sir, was there any proposal to open an 'air-strip' in Kanyakumari which is the fag end of India?

THE HON. THIRU S. J. SADIQ PASHA : Sir, I am not aware of such proposals.